[22nd February 1961

SRI S. M. ANNAMALAI : அந்த சிபார்சுகளின் பேரில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? எந்தெந்த சிபார்சுகளை அமல் நடத்தியிருக்கிறார்கள்?

THE HON. SRI P. KAKKAN : சிபார்சுகள் இப்பொழுதுதான் செய்யப்பட்டு இருக்கின்றன. எந்தெந்த சிபார்சுகளை அமல் நடத்தவேண்டுமோ, அங்கே இருக்கக்கூடிய சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியர், சிப் எஞ்சினியர் ஆகியோர் அரசாங்கத்தினுடைய அப்ரூவல் வாங்கி அமல் நடத்த தக்க ஏற்பாடு செய்வார்கள்.

SRI S. M. ANNAMALAI : மராமத்து இலாகாவைச் சேர்ந்த நான்கு இலாக்காக்களையும் ஒன்றாக இணைக்கவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டுள்ளதா? அப்படியாயின் சர்க்கார் அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI P. KAKKAN : அப்படி ஒன்றும் அங்கு முடிவு எடுக்கப்படவில்லை.

Coastal Road

*357 Q.—**SRI S. M. ANNAMALAI :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 23-ந் தேதியில் நட்சத்திரக் குறியிடாத கேள்வி எண் 17-க்கு அளித்த பதிலையொட்டி முத்துப்பேட்டையிலிருந்து, மைமீசல் (via) ராஜமடம் கடற்கரை பாதை அமைக்கும் விஷயமாக மத்திய சர்க்காரிடமிருந்து பதில் வந்துவிட்டதா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

SRI S. M. ANNAMALAI : இந்தப் பாதையை மூன்றாவது திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று சென்னை சர்க்கார் எப்பொழுது மத்திய சர்க்காருக்கு எழுதினார்கள்? அது ஏன் பரிசீலனை செய்யப்படாமல் மத்திய சர்க்காரிடமிருந்து பதில் வராமல் இருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் ஏற்கெனவே பரிசீலனை செய்யப்பட்டு வந்திருக்கிறது. இந்த ரோடின் நீளம் கொஞ்ச நஞ்சமல்ல. 451 மைல் நீளம் இருக்கிறது. இப்பொழுது மூன்றாவது திட்டத்தில் 5 கோடி ரூபாய் வரை செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய அங்கீகாரம் பெற்ற பிறகு அமல் நடத்தப்படும்.

22nd February 1961]

SRI S. M. ANNAMALAI : இந்தப் பாதையை மூன்ருவது திட்டத்தில் எப்படியாவது சேர்க்கவேண்டுமென்று மேலும் மேலும் மத்திய சர்க்காரை வற்புறுத்தி உடனடியாக மூன்ருவது திட்டத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கையை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை ?

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கம் இதில் ரொம்பவும் அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அங்கத்தினர் தெரிந்து கொள்ளவேண்டும்.

SRI A. VEDARATHNAM : இது " கோஸ்டல் " ரோடாக இருக்கிற காரணத்தினுலே இதை நேஷனல் ஹைவேஸ் ஆக மாற்றவேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ? அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிருர்களா ? அப்படியானுல் விவரம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : The Working Group on Communications had recommended the upgrading of the road from Madras to Cape Comorin (451 miles) as a National Highway at a cost of Rs. 5 crores.

SRI R. SRINIVASA IYER : இந்தக் கேள்வி முத்துப்பேட்டையிலிருந்து மைமீசல் வரையுள்ள பாதையைப் பற்றியது. தஞ்சை ஜில்லாவில் அந்த லிமிட்டுக்குள்ளே இருக்கக்கூடிய சில முக்கியமான பாலங்களைக் கட்டவேண்டியிருக்கிறதே. அந்தப் பாலங்களைக் கட்டிவிட்டால் பஸ் போக்குவரத்திற்கு சௌகரியமாக இருக்குமே. அதற்கு நம்முடைய சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிருர்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது எங்கெல்லாம் பாலங்கள் அமைக்க வேண்டுமோ அதற்கான நடவடிக்கையை சர்க்கார் எடுத்து வருகிறது. மத்திய சர்க்கார் அங்கீகாரம் பெற்ற பிறகுதான் வேலை துரிதமாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

SRI S. M. ANNAMALAI : இந்தப் பாதையைப் போடுவதற்கு எவ்வளவு செலவாகுமென்று சர்க்கார் திட்டமிட்டிருக்கிருர்களா ?

THE HON. SRI P. KAKKAN : முன்பே சொன்னேன். ஐந்து கோடி ரூபாய் வரைக்கும் செலவாகுமென்று வொர்க்கிங் குரூப் சொல்லியிருக்கிருர்கள்.

Industrial Society

* 385 *Q.*—**SRI P. S. CHINNADURAI :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பரமக்குடி இன்டஸ்ட்ரியல் சொசைட்டியில் அதன் பைலாவுக்கு விரோதமாக 37 பேர்களை மெம்பர்களாகச் சேர்க்கப் பட்டு, வேலை கொடுக்கப்படுவதாகவும், அதற்கு பதிலாக